தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 1, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு—2024

1993, பிப்ரவரி 12, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்''

நல்லதை மட்டுமே நாட்டம் கொண்டு, இனிய சொற்களையே சொல்பவர்களுக்கு, அவர்களுடைய தீமைகள் அகன்று நன்மைகள் பெருகும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள், வினா எண். 61, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

61—

அகில இந்திய பணிகளுக்காக நேர்காணல் தேர்வுகளுக்குச் செல்லும் மாணவர்கள் ''புதுடெல்லி, தமிழ்நாடு இல்லத்தில்'' தங்க அறைகள் கொடுத்தல்.

*10179—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அகில இந்தியப் பணிகளின் நேர்காணல் தேர்வுகளுக்கு தமிழகத்திலிருந்து புதுடெல்லி செல்லும் மாணவர்கள் தங்குவதற்கு ''தமிழ்நாடு இல்லத்தில்'' அறைகள் கொடுக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1993 பிப்ரவரி 12

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அகில இந்தியப் பணிகள் மற்றும் மத்திய தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வுகளுக்கு தமிழகத்திலிருந்து புதுடெல்லி செல்லும்; வேலையில் இல்லாத படித்த இளைஞர்கள் தங்குவதற்கு ''தமிழ்நாடு இல்லத்தில்'' மூன்று நாட்கள் சலுகைக் கட்டணத்தில் அறைகள் ஒதுக்கப்படுகிறது. இதற்கு நாளொன்றிற்கு சலுகை கட்டணமாக குளிர்சாதன அறையாக இருந்தால் ரூ. 30 (ரூபாய் முப்பதும்) சாதாரண அறையாக இருந்தால் நாளொன்றிற்கு ரூ. 10 (ரூபாய் பத்தும்) கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதைத் தவிர மேற்கூறிய மூன்று நாட்களுக்கு உணவு வசதியும் சலுகைக் கட்டணத்தில் தரப்படுகிறது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக அகில இந்தியப் பணிகள் என்று சொல்லப்படுகின்ற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளுக்குச் செல்கின்ற தமிழக மாணவர்களின் பங்கீடு குறைவாக இருந்து வந்தது. இந்தக் குறையைத் தீர்க்கும் முகத்தான் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக அங்கு வந்து தங்குபவர்களின் எண்ணிக்கை கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிகமாகியிருக்கிறது, அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 3 கட்டமாக இந்தத் தேர்வுகளுக்கான ரிசல்ட் வருகிறது. நேர்காணலுக்கு அங்கே தொடர்ந்து ஒரு மாதம் தங்க வேண்டும். ஒரு மாதத்திற்குமேல் அங்கே தங்கி ராவ் இன்ஸ்ட்டிட்யூட் ஜவஹர்லால் நேரு யூனிவர்சிட்டி போன்றவற்றில் 'டெல்லியில் தங்கி தொடர்ந்து இந்த நேர்காணலுக்கு மார்க் இன்டர்வியூ' என்ற முறையில் மாணவர்களை அங்கே தயார் செய்கிறார்கள். எனவே, அவர்கள் அதிகமாக மார்க்குகள் வாங்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கிறது. நேர்காணலுக்கு 300 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன. அதற்கு அங்கே தங்கினால்தான் தமிழக மாணவர்கள் சிறப்பாக செயல்பட முடியும். ரிட்டன் எக்சாமினேசனில் என்னதான் மார்க்ஸ் அதிகமாக வாங்கியிருந்தாலும்கூட நேர்காணலில் குறைவாக மதிப்பெண்கள் பெறுவதால்தான் தமிழக மக்கள் 'ஏ குரூப்' என்று சொல்லக்கூடிய சபாடினேட் சர்வீசசுக்கு செல்லக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, ரிசல்ட் வந்து, நேர்காணல் இன்டர்வியூ முடியும்வரை அவர்கள் அங்கே தங்கக் கூடியவரையில் வாய்ப்பை விஸ்தரிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்வருவார்களா என மெத்தப் பணிவோடு அறிய விரும்புகிறேன்.

1993 பிப்ரவரி 12]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, இங்கிருந்து இந்தத் தேர்வுகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு, வேலையில்லாத மாணவர்களுக்கு 3 நாட்களுக்கு சலுகைக் கட்டணத்தில் அங்கே தங்கும் இடமும், உணவும் வழங்கப்படுகிறது. இது ஒரு கெஸ்ட் அவுஸ் ஆக நடத்தப்படுவதால் இங்கிருந்து பலரும் சென்று கொண்டு, வந்து கொண்டு இருப்பார்கள். எனவே நீண்டநாட்கள் அங்கே மாணவர்கள் தங்கியிருப்பதற்கு சலுகைக் கட்டணத்தில் இடம் கொடுப்பதற்கு இதுவரை எந்தச் செயற் குறிப்பும் அரசிடத்தில் இல்லை. இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணிகளுக்கு இணையான பணிகளுக்கு பப்ளிக் அன்டர்டேக்கிங் என்று சொல்லக் கூடிய பொதுத் துறை நிறுவனங்களுக்கு, ரெயில்வே ரெக்ரூட்மென்ட் போர்ட், ஸ்டாப் செலக்சன் கமிஷன் போன்றவற்றிற்கும் தமிழகத்திலுள்ள மக்கள் நேர்காணலுக்கு டெல்லிக்கு செல்கிறார்கள். அப்படி செல்லக்கூடிய மாணவர்களுக்கும் இந்த வசதியை விஸ்தரிப்பதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இல்லத்திலுள்ள அறைகளை ஒதுக்கீடு செய்வதில் பல வரைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. சலுகைமுறைக் கட்டணம், இடைப்பட்ட முறைக் கட்டணம் மற்றும் மற்றவர்களுக்கான கட்டணம் என அரசால் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் அகில இந்தியப் பணிகள் மற்றும் மத்தியத் தேர்வாணைக் குழு (யூ.பி.எஸ்.சி.) நடத்தும் தேர்வுகளுக்கு தமிழகத்திலிருந்து புதுடில்லி செல்லும் வேலைவாய்ப்பு வசதி கிட்டாத மாணவர்கள் தங்குவதற்கு நான் ஏற்கெனவே சொன்னது போல 3 நாட்கள் சலுகைக் கட்டணத்தில் இடம் தரப் படுகிறது.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லிக்கு நேர்காணல் செல்லும் மாணவர்கள் பெரும்பாலும் ஏழை எளிய மாணவர்களாக இருப்பதால் டெல்லிக்கு அவர்களால் சென்று வர முடியாத சிக்கலான

சூழ்நிலை இருப்பதால், அந்த இண்டர்வியூ கமிட்டி சென்னைக்கே வந்து அவர்களை இண்டர்வியூ செய்கிற ஏற்பாட்டை, மாண்புமிகு முதலவர் புரட்சித் தலைவி அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தமிழ்நாடு இல்லத்தில் உள்ள அறைகளை சலுகைக் கட்டணத்தில் அளிப்பது பற்றிய கேள்வி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 62, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

62—

திருக்கழுக்குன்றம் சங்கு தீர்த்தக் குளத்தை சீரமைத்தல்.

*11785—திரு. பி. சொக்கலிங்கம் :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றத்தில் உள்ள சங்குதீர்த்தக் குளத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கழுக்குன்றத்தில் உள்ள சங்கு தீர்த்தக் குளத்தை சீரமைக்க ரூ. 7,50,000-க்கான மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதி அங்கீகரிக்கப்பட்டு இதற்கான நிதி திரட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறரைக் கோடி தமிழ் மக்களின் இதயங்களில் குடிகொண்டிருக்கும் என்னுடைய தெய்வத்தாய் அவர்கள் இந்துக் கோரிக்கையை ஏற்று வழிவகை செய்தமைக்காக அன்னாருடைய பாதங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 63, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு நிதியமைச்சர்.